மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை

அசல் வழக்கு எண். 43/2025

**2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 26–ம் நாள் புதன் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கார்த்திகேயன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | :சுந்தரராஜ் | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :வாலிகண்டாபுரம் | வயது | : 21/2025 |

**முதல் விசாரணை :**

(i) நான் இவ்வழக்கில் வாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். எனது ஆதார் அட்டையின் நகலை தாக்கல் செய்கிறேன்.(அது அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 24.12.2007 ம் தேதியிட்ட எனது தகப்பனார் சுந்தர்ராஜ் அவர்களின் இறப்பு சான்றிதழின் அசலை தாக்கல் செய்கிறேன்.(அது **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) எனது தகப்பனார் சுந்தர்ராஜ் அவர்களின் வாரிசு சான்றிதழின் அசலை தாக்கல் செய்கிறேன்.(அது **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) எனது தாயார் செல்வி அவர்களின் இறப்பு சான்றிதழின் அசலை தாக்கல் செய்கிறேன்.(அது **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 09.09.2014 ம் தேதியிட்ட எனது தாயார் செல்வி அவர்களின் வாரிசு சான்றிதழின் அசலை தாக்கல் செய்கிறேன்.(அது **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)எனது உடன் பிறந்த சகோதரர் பிரபாகரன் என்பவரின் ஆதார் அட்டையின் நகலை தாக்கல் செய்கிறேன்.(அது அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

ii) 08.09.2021 ம் தேதியிட்ட எனது உடன் பிறந்த சகோதரர் பிரபாகரன் என்பவரின் இறப்பு சான்றிதழனின் அசலை தாக்கல் செய்கிறேன்.(அது **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) இறந்துபோன எனது சகோதரர் பிரபாகரனுக்கு என்னை சட்டபடி வாரிசு என சான்று வழங்க வேண்டி நான் 1ம் பிரதிவாதியிடம் கொடுத்த மனுவின் பேரில் 09.05.2022 ம் தேதியிட்டு 1ம் பிரதிவாதியால் நிராகரிக்கப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அசலை தாக்கல் செய்கிறேன்.(அது **வா.சா.ஆ.8** ஆக

குறியீடு செய்யப்படுகிறது.) தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். பிரதிவாதிகள் தரப்பில் தோன்றா தரப்பினர் ஆகி விட்டதால், எனவே குறுக்கு விசாரணை இல்லை.

Taken down by me in open court read over to the Witness and admitted by the Witness to be correct

District Munsif
– Cum-
Judicial Magistrate